**மாதிரி வினாத்தாள்**

வாழ்க்கை இயக்கச் செயல்கள் - பகுதி I

10th Standard

**அறிவியல்**

Reg.No. :

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

III.வினா எண் 16-ற்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

Time : 00:50:00 Hrs

Total Marks : 50

## பகுதி - அ

5 x 1 = 5

1) மானோட்ரோபோவில்,உணவுப் பொருள்களை உறிஞ்சுவதற்கான சிறப்பான வேர்கள்.

(a) ஹாஸ்டோரியங்கள் (b) மைக்கோரைசா வேர்கள் (c) பற்று வேர்கள் (d) வேற்றிட வேர்கள்

2) ஈஸ்ட்டின் காற்றில்லாச் சுவாசத்தினால் உண்டானது

(a) லாக்டிக் அமிலம் (b) பைருவிக் அமிலம் (c) எத்தனால் (d) அசிடிக் அமிலம் .

3) நீர்த் தேவைக்காகத் தென்னையின் வேர்கள்,தாய்த் தாவரத்தைவிட்டு வெகுதொலைவில் உள்ளன.அத்தகைய வேர்களின் இயக்கம்.

(a) ஒளி சார் இயக்கம் (b) ஈர்ப்புச்சார்பு இயக்கம் (c) நீர்ச் சார்பு இயக்கம். (d) வேதிச்சார் இயக்கம்

4) தாவரங்களில் சைலத்தின் பணி.

(a) நீரைக் கடத்துதல் (b) உணவைக் கடத்துதல் (c) அமினோ அமிலத்தைக் கடத்துதல் (d) ஆக்சிஜனைக் கடத்துதல்


5) தற்சார்பு ஊட்ட முறைக்குத் தேவைப்படுவது.

(a) $CO_2$மற்றும் நீர் (b) பச்சையம் (c) சூரிய ஒளி (d) இவை அனைத்தும்

## பகுதி - ஆ

7 x 2 = 14

6) A,B குறிப்பிட்ட தாவரத் தண்டின் வாஸ்குலார் திசுக்களின் பெயர்களைக் குறிப்பிடுக.




அ)A,B இன் பெயர்கள்

ஆ)A யின் வழியாகக் கடத்தப்படும் பொருள்கள் யாவை?

இ)B யின் வழியாகக் கடத்தப்படும் பொருள்கள் யாவை?

ஈ)எவ்வாறு A யின் வழியாக பொருள்கள் இலைகளுக்குக் கடத்தப்படுகின்றன?

7) உணவூட்டம் அன்றால் என்ன? எந்த வகையான பசுந்தவரங்களிலும் பெரும்பாலான விலங்கினங்களிலும் காணப்படுகிறது?


8) கீழே கொடுக்கப்பட்டுள்ள ஊட்ட முறைகளோடு,அவற்றின் சிறப்பு உறுப்புகளை தக்க எடுத்துக்காட்டுகளுடன் பொருத்துக

| | | |
|---|---|---|
| தற்சார்பு ஊட்ட முறை | மைக்கோரைசா வேர்கள் | கஸ்குட்டா |
| ஒட்டுண்ணிகள் | பச்சையம் | மானோட்ரோபா |
| மக்குண்ணிகள் | ஹாஸ்டோரியங்கள் | ஹைபிஸ்கஸ் |

9) கொடுக்கப்பட்டிருக்கும் படத்தை கவனிக்க.

அ)படம் A,B யில் காணப்படும் இயக்கங்களைக் குறிப்பிடுக.

ஆ)எவ்வாறு இவ்வியக்கங்கள் தொட்டால் சிணுங்கி இலைகளின் இயக்கங்களிலிருந்து வேறுபடுகின்றன?




10) காற்றில்லாச் சுவாசத்தில்-----------------என்பது 6 கார்பன் கொண்ட சேர்மம்,லாக்டிக் அமிலம் என்பது-----------------கரிமச் சேர்மம்.

11) சர்க்கரைக் கரைசல் ஆல்கஹாலாக மாற்றமடைகிறது.

அ)மேற்கண்ட செயலில் எத்தகைய நிகழ்ச்சி நடைபெறுகிறது?

ஆ)எந்த நுண்ணுயிரி ஈடுபடுகிறது?

12) மனிதனின் சுவாசக்காற்றானது--------------------வழியாக--------------------க்குள் செல்கிறது.மீன்களில் நீரானது------------வழியாக உடலுக்குள் சென்று நீரில் கரைந்துள்ள ஆக்ஸிஜன்-------------க்குள் பரவுகிறது.

## பகுதி - இ

5 x 5 = 25

13) தாவரங்களில் காணப்படும் பல்வேறு இயக்கங்களை தகுந்த சான்றுகளுடன் விளக்குக.

14) விலங்குகளில் காணப்படும் பல்வேறு விதமான கழிவுநீக்க முறைகளை விவரிக்க.

15) உயர்வகைத் தாவரங்களில் நடைபெறும் சுவாசித்தலை,கீழ்நிலைத் தாவரங்களில் நடைபெறும் சுவாசித்தலோடு ஒப்பிடுக.

16) a) தொட்டால் சிணுங்கித் தாவரத்தில் இலைகளில் எத்தகைய இயக்கங்களைக் காண்கிறாய்?விவரிக்க.

**(OR)**

b) செல்லுக்குள் செரித்தல்,செல்லுக்கு வெளியே செரித்தல் வேறுபடுத்துக. எவ்வகை செரித்தல் பரிணாமத்தில் உயர்மட்ட உயிரினங்களில் காணப்படுகிறது?

*****************************************